பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 11 | சனிக்கிழமை | 26.08.2023 | அதிர்வு 25

## ஐந்து நாள்களுக்குள் 6 சூட்டுச் சம்பவங்கள்

**அறுவர் பலி; ஒருவர் படுகாயம்**

நாட்டில் கடந்த ஐந்து நாள்களில் 6 துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் பதிவாகி யுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இதில் 6 பேர்

06

# தூதுவர் கோபால் பாக்லே டிசெம்பரில் ஆஸிக்கு பிறஸல்ஸில் இருந்து சந்தோஷ் ஜா கொழும்புக்கு!



இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் 13 ஆம் திருத்தம் உட்பட்ட நகர்வுகள் அதிகம் பேசப்பட்டுவரும் நிலையில், இதுவரை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிக ராகப் பணியாற்றிவரும் கோபால் பாக்லே வுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதான செய்தி அவதானத்தை பெற்றுள்ளது.

"ஹிந்துஸ்தான் ரைம்ஸ்"

02



# சீனக் கப்பல் இங்கு வருவதாலேயே ராஜ்நாத் சிங் கொழும்புக்கு விரைவு

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கையிடம் புதுடில்லியின் கரிசனையை நேரில் உரைப்பார்



**- என்.புவியரசன் -**

**கொழும்பு, ஓகஸ்ட் 26**

**சீன ஆய்வுக் கப்பலான 'ஷி யான் - 6' கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டைக்கு வரவுள்ள பின்னணி யில்தான் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ் நாத் சிங்கின் இலங்கைக்கான விஜயம் அமைந் துள்ளது என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

07

# இறுதித் தோட்டா முடியும் வரைப் போரிட்டு குடும்பத்துடன் மடிந்தவர்தான் பிரபாகரன்!



## அவரின் மகிமையைக் கொச்சைப்படுத்தாதீர் என்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலர்

கொழும்பு,ஓக.26

"தனது துப்பாக்கியில் இறுதித் தோட்டா முடியும் வரைக்கும் போரிட்டுக் குடும் பத்துடன் மடிந்தவர்தான் விடுத லைப் புலிகளின் தலைவர் பிரபாகரன். இந்நிலையில், அவரையும், அவரது குடும்பத்தையும் வைத்துப் பிழைப்பு நடத் துகின்றார்கள் புலம்பெயர் தமிழர்கள்."

– இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும்

06

# பொலிஸாரை விமர்சித்த கஜேந்திரகுமாரின் வீட்டைப் பாதுகாப்பது அதே பொலிஸ்தான்!

## கிண்டலடிக்கின்றார் உதய கம்மன்பில



"பொலிஸாரைக் கண்ட படி விமர்சித்து அரசியல் செய்து வந்த கஜேந்திரகு மார் பொன்னமபலம் எம். பி., தற்போது பொலிஸா ரைத் தனது கொழும்பு வீட் டுக்கு வரவழைத்துப் பாது காப்புக்கு

06



## இரகசியம்



கடந்த நாற்பது ஆண்டு களுக்கு மேல் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் நேரடி யாக – முனைப்பாக – ஈடுபட்ட இந்தியத் தரப்பு, இப்போது தமிழர் விடயத்துக்குப் பெரும் பாலும் முக்கியத்துவம் கொடுக்காத நிலைமைதான் என்கின்றன விடயம்

06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# வந்தேறு குடிகளான தமிழர்களுக்கு இங்கு எந்த இடமும் சொந்தமல்ல!

## உரிமை கேட்டால் இந்தியாவுக்கு அவர்கள் விரட்டியடிக்கப்படுவர் என்கிறார் மேர்வின்

கொழும்பு, ஓக. 26

"வடக்கு - கிழக்கு தமிழர்களின் பூர்வீக தாயகம் அல்ல. இது சிங்களவர்களின் பூர்வீக தாயகம். இந்நாட்டில் தமிழர்களுக்கு எந்த இடமும் சொந்தம் அல்ல."

- இவ்வாறு மீண்டுமொரு சர்ச்சைக் கருத்தை நேற்று வெளியிட்டுள்ளார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா.

அவர் மேலும் கூறுகையில் -

"வந்தேறு குடிகளான தமிழர்கள், இலங்கையில் எந்த இடத்தையும் சொந்தம் கொண்டாட முடியாது. இந்தியாவிலிருந்து இலங்கை வந்த தமிழர்கள், இங்குள்ள இடங்களைச் சொந்தம் கொண்டாடினால் அவர்கள் மீண்டும் இந்தியாவுக்கு விரட்டியடிக்கப்படுவார்கள்.

வடக்கு - கிழக்கை "தமிழீழம்" என்று பிரபாகரன் சொந்தம் கொண்டாட முயன்றார். இறுதியில் அவருக்கு என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இதைத் தமிழர்கள் மனதில் வைத்திருந்தால் சரி. இல்லையேல் அவர்களுக்குச் சிங்களவர்கள் செயலில்தான் பாடம் கற்பிக்க வேண்டி வரும்." - என்று அவர் கூறியிருக்கின்றார்.



## வடக்கு - கிழக்கு சட்டத்தரணிகளின் சவாலுக்கு சரத் வீரசேகரவின் பதில் நாடாளுமன்றத்திலாம்!



"முல்லைத்தீவு நீதிபதியைக் காப்பாற்ற முயலும் வடக்கு - கிழக்கு சட்டத்தரணிகளின் எழுச்சியைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். சட்டத்தரணிகள் எனக்கு விடுத்துள்ள சவாலுக்கு நான் நாடாளுமன்றத்தில் வைத்துத்தான் பதில் வழங்குவேன்."

- இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக சரத் வீரசேகர எம்.பி. நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்குக் கண்டனம் தெரிவித்து வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து தத்தமது நீதிமன்றங்கள் முன்பாக அடையாளக் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது அவர்கள், "சரத் வீரசேகர எம்.பி. நாடாளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்துக்குள் இருந்து கொண்டு கதைக்காமல் தைரியமிருந்தால் வெளியில் வந்து கதைக்க வேண்டும்" - என்று சவால் விடுத்திருந்தனர்.

இந்தச் சவால் தொடர்பாகச் சரத் வீரசேகர எம்.பியிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நாடாளுமன்றத்தில் நான் தெரிவித்திருந்த கருத்துக்குத்தான் வடக்கு - கிழக்கு சட்டத்தரணிகள் சவால் விடுத்துள்ளனர். எனவே, அவர்களின் சவாலுக்கு நான் நாடாளுமன்றத்தில் வைத்துத்தான் பதில் வழங்குவேன்" - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## தூதுவர் கோபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

பத்திரிகை நேற்று இச்செய்தியை வெளியிட்டிருந்தது.

கோபால் பாக்லேயின் இடத்துக்கு பிரஸல்ஸில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இந்தியத் தூதராக உள்ள சந்தோஷ் ஜா நியமிக்கப்படவுள்ளார் எனவும் கோபால் பாக்லே, ஆஸ்திரேலியாவிற்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்படுவார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் மூத்த இராஜதந்திரியான கோபால் பாக்லே, கடந்த 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக பணியாற்றிவருகின்றார்.

கடந்த மூன்றரை ஆண்டுகளாக சிறிலங்காவில் பணியாற்றும் கோபால் பாக்லே, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு உள்ளிட்ட பல்வேறு தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களில் ஈடுபாட்டுடன் செயற்பட்டிருந்தார்.

இந்த நிலையில் மிக நெருக்கமான இருதரப்பு உறவைக் கொண்டுள்ள ஆஸ்திரேலியாவிற்கான இந்தியத் தூதுவர் பதவியில் இருக்கும் மன்பிரீட் வொஹ்ராவின் பதவிக் காலம் டிசம்பரில் முடிவடைகின்றது. அந்த இடத்துக்கு கோபால் பாக்லே நியமனம் பெற்று, எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் கன்பராவில் அந்தப் பொறுப்புக்களை ஏற்கவுள்ளார்.

கோபால் பாக்லேயின் கொழும்புத் தூதுவர் பதவிக்கு, இந்திய - ஐரோப்பிய ஒன்றிய சுயாதீன வர்த்தக உடன்படிக்கையில் முக்கிய பங்காற்றிய சந்தோஷ் ஜா, நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா விடயத்தில் சீனாவும் இந்தியாவும் தமது செல்வாக்கை செலுத்துவதற்கு முயற்சிக்கும் முக்கியமான தருணத்தில் சந்தோஷ் ஜா, உயர்ஸ்தானிகர் பொறுப்பிற்கு நியமிக்கப்படவுள்ளார்.

சீனாவின் மற்றுமொரு நட்பு நாடான பாகிஸ்தானைப் போன்று பொருளாதார நெருக்கடியில் தத்தளிக்கும் சிறிலங்கா, சீனாவுக்கு எதிரான இந்தியாவின் மூலோபாய கரிசனைகளுக்கு இன்னும் சாதகமாக பதிலளிக்க வேண்டிய சூழல் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டையின் ஆழ்கடல் துறைமுகங்களில் சீனக் கண்காணிப்பு கப்பல்கள் மற்றும் பெலஸ்ரிக் ஏவுகணை கண்காணிப்பு கப்பல்களை அனுமதிப்பது தொடர்பான விடயங்கள் பேசுபொருளாகியுள்ள பின்னணியில் இந்தப் பதவி மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய வெளியுறவு அமைச்சின் தலைமைச் செயலகத்தில் கிழக்கு விடயங்களுக்குப் பொறுப்பான செயலாளராகப் பணியாற்றி வரும் சரூப் குமார், பிறஸல்ஸில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இந்தியத் தூதராக நியமனம் பெறலாம் என்று கூறப்படுகின்றது.

# நீர்த் தொட்டியில் வீழ்ந்து; பெண் குழந்தை மரணம்

## வவுனியா நெளுக்குளத்தில் சம்பவம்







வவுனியா நெளுக்குளம் பகுதியில் நீர்த்தொட்டியில் வீழ்ந்து இரண்டு வயது பெண்குழந்தை ஒன்று மரணமடைந்தது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:–

மாலை வீட்டு முற்றத்தில் சிறுமி விளையாடிக்கொண்டிருந்தார். எனினும் சிறிது நேரத்தில் குழந்தையைக் காணாத நிலையில் பெற்றோர் அவரைத. தேடியுள்ளனர்.

இதன்போது அந்தக் குழந்தை கிணற்றிற்கு அருகாமையில் இருந்த நீர்த்தொட்டியில் வீழ்ந்துள்ளமை கண்டறியப்பட்டது.

உடனடியாக மீட்கப்பட்ட சிறுமி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் வைத்தியசாலையில் அனுமதிக்கும் முன்னரே குழந்தை மரணமடைந்து விட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் நெளுக்குளம் பகுதியை சேர்ந்த லிங்கராஜா திவிக்கா என்ற இரண்டு வயதான குழந்தையே மரண–மடைந்தது.

சம்பவம் தொடர்பாக நெளுக்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நல்லூர் மூத்த விநாயகர் ஆலய இராஜ கோபுர கும்பாபிசேகம்







நல்லூர் மூத்த விநாயகர் ஆலய பஞ்சதள இராஜ கோபுர மகா கும்பாபிசேகம் கடந்த புதன் காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து விநாயக பெருமான் வீதி வலம் வந்தார்.

அதனை தொடர்ந்து நாட்டியாஞ்சலி நிகழ்வு இடம்பெற்று, பிரதான கும்பங்கள் வீதி வலம் வந்து, பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேக பெருவிழா இடம்பெற்றது.

இந்தக் கும்பாபிஷேக பெருவிழாவில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# நாடாளுமன்றத்துக்கு வெளியே வந்து இது போல கருத்துக் கூற சரத் வீரசேகரவிற்கு துணிவுண்டா?

## சாவகச்சேரி சட்டத்தரணி சயந்தன் சவால்



(த.சுபேசன்)

**சரத் வீரசேகரவிற்கு துணிவிருந்தால் நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பாவிக்காமல் - நாடாளுமன்றத்திற்கு உள்ளே இருந்து உரையாற்றாமல் - நாடாளுமன்றத்திற்கு வெளியே வந்து கருத்து வெளியிட முடியுமா?**

**- இப்படி சாவகச்சேரி சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணி கேசவன் சயந்தன் சவால் விடுத்துள்ளார்.**

நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகரவின் கருத்தைக் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றம் முன்பாக இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி சவாலை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தொடர்சியாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை அவதூறு செய்யும் விதத்தில் நாடாளுமன்றத்தில் வீராப்பு பேச்சினை பேசி வருகிறார்.

அதனைக் கண்டித்து வடக்கு மாகாணத்தில் உள்ள சகல நீதிமன்றங்களின் முன்பாகவும் சம நேரத்தில் சட்டத்தரணிகள் சங்கங்களால் போராட்டம் நடத்தப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தன்னுடைய நாடாளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்து இவ்வாறாக நீதித்துறையை அச்சுறுத்தும் விதத்திலான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

கடந்த தடவையும் அவருடைய நாடாளுமன்றக் கருத்தைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தோம்.ஆனாலும் அவர் திருந்துவதாக இல்லை.

எதிர்வரும் காலங்களில் நீதிபதிகளும் நீதித்துறையை பாதுகாக்க போராட வேண்டி வரலாம். அதனை தான் சரத் வீரசேகர விரும்புகிறார் என நினைக்கிறேன்.

சட்டத்தை இயற்றுகின்ற சட்டவாக்கத்துறையான நாடாளுமன்றத்தின் ஓர் உறுப்பினராக இருந்து கொண்டு அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனமான நீதிமன்றங்களை அவதூறு செய்வது இந்த நாட்டில் சர்வாதிகார ஆட்சி இடம்பெறுகின்றதா அல்லது ஜனநாயக ஆட்சிதான் நடைபெறுகின்றதாஎன்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்றார்.

# குருந்தூர்மலையை மையமாகக் கொண்டு இன, மதக் கலவரங்களுக்கு இடமளியாதீர்!

## ஐக்கிய மக்கள் சக்தி விநயமாக வேண்டுகோள்

குருந்தூர்மலையை அடிப்படையாகக் கொண்டு இன மற்றும் மத கலவரங்கள் ஏற்படுவதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாதென ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் யுத்தத்தினால் பாரியளவில் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீண்டுமொரு முறை யுத்தத்தை தூண்ட மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வன்மையாக கண்டிக்கத்தக்கவை என கிளிநொச்சி மாவட்டத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட போது கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர் –

“குருந்தூர்மலை தொடர்பில் தற்போது பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. எந்தவொரு மதமும் தமது உரிமைகளுக்காக வன்முறைகளில் ஈடுபடுமாறு கூறவில்லை. இது தொடர்பில் நாம் கவலையடைய வேண்டும்.

அனைத்து மதங்களும் அனைத்து மதத்தையும் மதிக்குமாறு போதித்துள்ளன.

குருந்தூர்மலை தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பது அனைவரும் அறிந்த விடயம். தற்போது இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது அரசாங்கத்தின் முதன்மையான கடமையாக அமைந்துள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் மூலம் குறித்த பகுதி தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்ததென அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.




மாறாக இதனை வைத்து இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டக் கூடாது.

குருந்தூர்மலையின் தொல்பொருள் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப்பிரச்சினைக்குத்தீர்வு காண அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்” – என்றார்.

# நல்லூரான் ஐந்தாம் நாள்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவ ஐந்தாம் நாள்
மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சம
தேராக முருகப்பெருமான் அன்ன வாகனத்தில் வீதியுலாவந்தார்.
படங்கள் - பிரபாகன் டிலக்சன்















## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிந்த வட்டாரங்கள்.

புதுடெல்லி அரசியல் தலைமையும் இராஜதந்திர வட்டாரங்களும் கொழும்பு அரசுடன் அக்கப்போர் நடத்திக் களைத்து விட்டனவோ என்னவோ, ஆனால் ஈழத் தமிழர் விடயத்தில் சலித்து விட்டன என்பது மட்டும் நிச்சயம்.

தமிழர்களின் ஈகமும் தியாகமும் நிறைந்த விடுதலைப் போராட்டத்தின் விழுமியங்களை – அவற்றின் உட்கிடையாகப் பொதிந்து கிடக்கும் விடுதலை வேட்கையை–அதன்நியாயத்தை–புரிந்து, உணர்ந்து, மதித்து, ஏற்றுக் கொண்ட தரப்புகள் எதுவும் புதுடெல்லியில் ராஜதந்திர மட்டத்திலோ அல்லது அரசியல் மட்டத்திலோ இப்போது இல்லை. அவர்களைப் பொறுத்தவரை அவை எல்லாம் பயங்கரவாதம். அவ்வளவுதான்.

அந்தத் தரப்புகளுக்கு இப்போது தேவைப்படுவது எல்லாம் தமக்கு ஒத்திசைந்து, 13 மட்டுமே தீர்வு என்று ஓடக் கூடிய ஈழத் தமிழர் பிரதிநிதித்துவம்தான். ஆனால் இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த கட்சியும் '13தான் தீர்வு' என்ற ஏக நிலைப்பாட்டில் இல்லை என்பதே புதுடெல்லியின் ஒரே ஆதங்கம்.

சங்கரியாரும் எந்திரி விக்னேஸ்வரனும்தான் கொஞ்சம் இந்தியத் தரப்புடன் இசைந்து ஓடக் கூடியவர்கள். ஆனால் இருவருக்கும் மக்கள் அங்கீகாரம் இம்மியளவும் கிடையாது. அதிலும் சங்கரியார் இந்தியா முன்னிறுத்தும் 13யும் தாண்டி 'இந்திய மொடல்' என்று வேறு கதை விடுகிறார்.

பிற தரப்புகள் எவையும் இந்தியா வற்புறுத்தும் 13 ஐ மட்டும் கட்டிப்பிடித்து நிற்பனவாக இல்லை.

இலங்கை அரசுடன் அணி சேர்ந்து இருக்கும் அமைச்சர் டக்ளஸ் கூட அதிகாரப் பகிர்வுக்கான ஆரம்பப் புள்ளியாகவே 13 இன் முழு நடைமுறையாக்கத்தைப் பார்க்கிறார். அதையும் தாண்டிய அதிகாரப் பகிர்வையே அவரும் கோருகிறார்.

இந்தியாவின் சொற்படி நடக்கும் தரப்புகள் என்று அண்மைக் காலம் வரை கருதப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பவை கூட13 இன் முழு நடைமுறையாக்கத்துக்கு வலியுறுத்தினாலும், அதைத் தனித்துத் தீர்வாகக் கேட்கத் தயாரில்லை. அதற்கு அப்பால் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டால், தாங்கள் எங்கோ தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் அவற்றுக்கு.

தங்களின் ஒரே வலியுறுத்தலான 13 ஆம் திருத்த நடைமுறையாக்கமே தீர்வு என்று கூறி, தம்முடன் சேர்ந்து செயல்பட எந்தத் தமிழ் கட்சியும் தயார் இல்லை என்பது, இந்த விடயத்தில் நீண்டகாலம் ஈடுபட்டு , பழமும் தின்று, கொட்டையும் போட்ட இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் உட்பட்ட புதுடெல்லி டீமின் ஆதங்கம், எரிச்சல், கோபம், சினம், சீற்றம் எல்லாமுமே.

பிரதான தமிழ் கட்சியான தமிழரசு சொல்லுக்குச் சொல் சமஷ்டி என்கிறது. கஜேந்திரகுமார் அணியின் நிலைமையோ எல்லாவற்றையும் தாண்டியது.

தனி ஆவர்த்தனம் வாசிக்கும் நீதியரசர் விக்னேஸ்வரன், இப்போது ரணிலின் சட்டைப் பைக்குள், அவரை நம்பி இறங்க முடியாது, ஏதும் செய்ய முடியாது, செய்வதிலும் அர்த்தமில்லை என்பது புதுடில்லியின் கணிப்பு.

ஆக, இந்த அரசியல் கட்சிகளினால் பயனில்லை, இனி அவர்களைக் கைவிட்டு வேறு வழி பார்க்கலாம் என்று எண்ணத் தலைப்பட்ட புதுடெல்லி, அதற்காக வடக்கு – கிழக்கில் கண் வைத்து, வலை விரித்திருக்கின்றது.

அப்போதுதான் வடக்கு – கிழக்கு சிவில் அமைப்பு அல்லது மக்களுக்கான சிவில் அமைப்பு என்ற பெயரில் வடக்குக் கிழக்கில் எழுந்திருக்கும் கட்சி சாராப் பிரமுகர்கள் கூட்டம் புதுடெல்லியின் கவனத்திற்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதுடெல்லிக்குப் போவதற்கு முன்னர், தமிழ் மக்களின் நிலைப்பாடு என்று கட்சி சாராமல் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பிரமுகர்களை ஒன்று திரட்டி ஒரு பொது ஆவணம் ஒன்றை – 13 இன் முழு நடைமுறையாக்கத்தை வலியுறுத்தி – அந்த அமைப்பு இந்தியப் பிரதமருக்கு அனுப்பி இருந்தது.

அதைப் பார்த்த புதுடெல்லி புளகாங்கிதம் அடைந்திருப்பதாகக் கேள்வி. கட்சி மற்றும் அரசியல் பதவி நிலை எதிர்பார்க்காத – இந்தக் கற்றறிந்த – சமூகத்தின் மூலம் விடயத்தை நகரத்தினால் என்ன என்ற எண்ணப்பாடு புதுடெல்லி தரப்புக்கு ஏற்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளை புதுடெல்லி விஜயத்துக்கு மூன்று, நான்கு வருடங்களாகக் காக்க வைத்திருக்கும் இந்தியத் தரப்பு இந்தச் சிவில் சமூக அமைப்பின் சில பிரதிநிதிகளை புதுடெல்லிக்கு அழைத்துப் பேசுவதற்கு சைகை காட்டி இருப்பதாக அறிய வருகிறது.

பல்வேறு புத்திஜீவிகளை – கற்றறிந்தோரை – மதத் தலைவர்களை – சமூகப் பெரியோர்களை – ஒன்றிணைத்து இந்த சிவில் கட்டமைப்பைக் கடைசி நேரத்தில் கட்டி இயக்கியவர், இயக்குபவர் ஓர் ஊடக நிறுவுநர். பின்னணியில் அவர்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனாலும் கட்சி, அரசியல் இலக்கு, அரசியல் பின்புல நோக்கம் ஏதுமின்றி செயற்படக் கூடிய, இலங்கைத் தமிழர்களின் பொது நலனுக்கான சமூக அமைப்பு இதுவே என்ற நம்பிக்கை புதுடெல்லிக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இந்த அமைப்பின் சில பிரதிநிதிகள் புதுடெல்லியில் வெளிவிகார அமைச்சர் ஜெய்சங்கரை விரைவில் சந்தித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இதற்குள் இன்னொரு விடயம். ஆங்கிலமும் சற்றுப் பேசக்கூடிய மற்றொரு ஊடகரின் காட்டில் இப்போது நல்ல மழை. ஒரே குரலில் – சத்தமாக – 13 பற்றி மட்டுமே பேசுவதாலும், புதுடெல்லியே சரணம் என்று புகழ் பாடுவதாலும்தான். புதுடெல்லி லைனில் விழுந்து விட்டால் திருந்தி விட்டதாக அர்த்தம் என்கிறார் அவர்.

எழுபதுகளில் இருந்து இப்படி எத்தனை விடயங்களை – தரப்புக்களை – கடந்து விட்டோம், இன்னும் எவ்வளவோ இருக்கும். பார்ப்போம்.

## இறுதித் தோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறுகையில் –

“பிரபாகரனோ அல்லது அவரின் குடும்பத்தில் எவருமோ இன்று உயிருடன் இல்லை. இறுதிப் போரில் பங்கெடுத்த படைத் தளபதிகளில் ஒருவன் என்ற ரீதியில் இந்த உண்மையை மீண்டுமொரு தடவை கூறுகின்றேன்.

இறுதி யுத்தத்தில் இறுதி வரைக்கும் போரிட்டுத் தன் குடும்பத்துடன் சாவடைந்தவர்தான் பிரபாகரன். அவர் பயங்கரவாத அமைப்பின் தலைவர். ஆனால், அவர் தனது கொள்கையில் இறுதி வரைக்கும் மாறாமல் நின்ற ஒரு தலைவர். அவருக்கென சில மகிமைகள் உண்டு. அந்த மகிமைகளைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று புலம்பெயர் தமிழர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

பிரபாகரனின் மனைவியின் சகோதரி என்று கூறப்படும் பெண் ஒருவரால் அண்மையில் வெளிவந்துள்ள காணொலி வலுக்கட்டாயமாக ஒரு தரப்பால் எடுக்கப்பட்டுள்ளது. அதில் பிரபாகரனின் மனைவி மதிவதனி தொடர்பிலும், அவரின் மகள் துவாரகா பற்றியும் அந்தப் பெண் வெளியிட்டுள்ள கருத்துக்கள் பொய்யானவை.” – என்றார்.

## பொலிஸாரை விமர்சித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறுத்தியுள்ளார். இது அவருக்கு வெட்கக்கேடான விடயம்.”

– இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

”வடக்கில் தமிழ் மக்கள் மத்தியிலும், தெற்கில் சிங்களவர்கள் மத்தியில் இனவாதக் கருத்துக்களால் தனது அரசியலை முன்நகர்த்துகின்றார் கஜேந்திரகுமார்.

கொழும்பில் மக்களின் எதிர்ப்புக்குப் பயந்த அவர், முற்கூட்டியே பெருமளவு பொலிஸாரைத் தனது வீட்டுக்கு வரவழைத்து பாதுகாப்புக்கு நிறுத்தியுள்ளார்.

கஜேந்திரகுமாருக்குத் துணிவு இருந்தால் பாதுகாப்புக்கு நிறுத்தியுள்ள பொலிஸாரை அகற்றிவிட்டு மக்கள் முன்னிலையில் விவாதம் செய்ய வரட்டும்.” – என்றார்.

## ஐந்து நாள்களுக்குள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

உயிரிழந்துள்ளனர். ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.


தேவை

கல்வி சம்பந்தமான You tube chanel இற்கு ஆங்கிலப் பேச்சுத் திறமையுள்ள presenter தேவை.

ஆங்கிலத்தில் சரளமாக உரையாற்றவும் எழுதவும் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

0752604360

Required

Need someone who can host Quiz in English Medium on Stage for AL students.

Please contact:- 0752604360




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசியல் சித்தர் ரணில்

யாழ்ப்பாணத்துச் சித்தர் பெருமான் யோகர் சுவாமிகளின் நான்கு மகா வாக்கியங்களில் ஒன்று - 'எப்போவே முடிந்த காரியம்'. அது குறித்து இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது அரசியல் காய் நகர்த்தல்களைக் கூட, இத்தகைய மகாவாக்கியக் கருத்து ஒன்றுக்குள் பொருத்தி நிற்பது போன்ற எண்ணத்துடன்தான் முன்னெடுக்கின்றார் என்பது கண்கூடு. தாம் எதை எதிர்பார்த்து அரசியல் காய் நகர்த்தல்களை நகர்த்துகின்றாரோ அவை கனகச்சிதமாக - எப்போதோ முடிந்த காரியம் போன்று - நடக்கின்றன என அவர் மகிழலாம். ஆனால் அது இறுதிவரை அப்படி நீடிக்குமா என்பது தெரியவில்லை. ஏனெனில் ரணில் அப்படி ஒன்றும் பெரிய அரசியல் சித்தர் அல்லவே...!

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் உரியபடி நிறைவேற்றப்பட்டு அரசமைப்புச் சட்டமுமாகிவிட்டது. அதில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டங்களும் கூட நாடாளுமன்றத்தில் பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டு சட்ட புத்தகங்களிலும் வந்துவிட்டன.

அவற்றைச் செயலில் நடைமுறைப்படுத்துவதுதான் மிச்சம். நிறைவேற்றதிகார ஜனாதிபதி என்ற முறையில் அதற்கான அதிகாரங்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்தான் இருக்கின்றன. தேவையான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு, அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியதுதான் எஞ்சியுள்ள அவரது பொறுப்பு.

நீதி,நியாயத்தை நிலைநாட்டும் அரசியல் தற்றுணிவு அவருக்கு இருக்குமானால், அதை அவராகவே செய்ய வேண்டியதுதானே? அப்படி அவருக்கு அத்தகைய துணிச்சல் இல்லாவிட்டால், இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகள் போல அந்த விடயங்களை செய்யாமல் - கையாளாமல் - வாயை மூடிக்கொண்டு வாளாவிருந்து விட்டுப்போவதுதானே?

அதை விடுத்து, 13 ஆவது திருத்தத்தின் நடைமுறையாக்கத்துக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியை பெறப் போகின்றேன் என்று சட்டரீதியிலோ, தார்மீக ரீதியிலோ தமக்குச் செய்யக் கடப்பாடு இல்லாத ஒன்றை அவர் செய்ய முற்பட்டு, சும்மா இருந்த சங்கை ஏன் ஊதிக் கெடுக்க வேண்டும்?

எப்பவோ - எப்போதோ - திட்டமிட்ட அவரது குயுக்தித்தன நடவடிக்கைகளின் கட்டங்கள்தான் இந்த 13 ஆம் திருத்தம் தொடர்பான அவரது இந்த நகர்வும். "13 ஐ நீங்கள் விரும்பாவிட்டால் அதை அரசமைப்பில் இருந்து நீக்குங்கள்!" - என்றும் நாடாளுமன்றத்திற்கு யோசனை வேறு அவர் எடுத்துக் கொடுத்திருக்கின்றார்.

அவர் குள்ளநரித்தனமாக உள்மனதுக்குள் திட்டமிட்டபடி, எதிர்பார்த்தபடி, 13ஆம் திருத்தத்துக்கு எதிரான பேரினவாத வெறிப்போக்கு - கருத்து நிலைப்பாடு - நாடாளுமன்றத்துக்குள் மட்டுமல்ல, அதற்கு வெளியிலும் தீவிரமாகக் கிளம்பி இருக்கின்றது. இனவாதக் கலவரங்கள் வெடிக்கும் பேராபத்து நிலை கூட ஏற்பட்டிருப்பதாகச் சுட்டப்படுகின்றது.

நாடாளுமன்றத்துடன் மாத்திரமல்ல, மகா சங்கத்துடனும் 13 குறித்துப் பேசியே முடிவு எடுக்க வேண்டும் என்று புதிய வெறிப்போக்கை ஆரம்பித்திருக்கிறது மகா சங்கத் தரப்பு.

இனி என்ன? பேரினவாதத் தீ கொழுந்து விட்டெரியும். அதில் ரணில் அரசியல் குளிர்காய்ந்து, அதன் மூலம் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறலாம் என எதிர்பார்க்கின்றார். கனவு காண்கின்றார்.

அதுவும் 'எப்பவோ முடிந்த காரியம்' என்ற வகையறாக்குள் - அவரின் திட்டமிட்டபடி அரங்கேறும் எதிர்பார்ப்புக்குள் - அடங்குமா என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும். அதுவரை பொறுத்திருப்பதுதான் வழி.

## சீனக் கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

இந்த விஜயத்தின் போது திருகோணமலைக்குப் பயணம் செய்யும் அவர், இரு நாடுகளையும் இணைக்கும் பெற்றோலியப் பொருள்கள் விநியோகத்துக்கான நேரடிக் குழாய் பாதையை அமைக்கும் திட்ட ஆரம்பப் பணியைப் பார்வையிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 2ஆம் அல்லது 3ஆம் திகதி அவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் தலைமை பணிப்பாளரும் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் உட்பட இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட குழுவினருடன் தீர்மானகரமான பேச்சுகளை அவர் நடத்தவுள்ளார் என்றும் கூறப்பட்டது.

இலங்கையையும் இந்தியாவையும் தரைப்பாலத்தின் ஊடாக இணைக்கும் திட்டம் உட்பட எதிர்காலத்தில் இரு நாடுகளும் நடைமுறைப்படுத்த உயர்மட்டத்தில் ஒப்புக்கொண்டுள்ள ஏனைய திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதும் இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாக அமையும் என்றும் கூறப்பட்டது.

இதனிடையே, சீன ஆய்வுக் கப்பலான "ஷி யான் – 6" ஒக்டோபர் 25ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள பின்னணியில் கப்பலின் வருகைக்கு முன்னதாகவே இந்திய அமைச்சரின் இந்த வருகை இப்போது திட்டமிடப்பட்டுள்ளது.

சீனக் கப்பலின் வருகை காரணமாக இந்திய மற்றும் இலங்கைக்கு இடையில் இராஜதந்திர ரீதியில் சிக்கல்கள் உருவாகியுள்ளன. சீனக் கப்பல்கள் வருகை தொடர்பில் கடந்த காலங்களிலும் இந்தியா கவலை வெளியிட்டிருந்தது.

அந்த வகையில், தற்போது இலங்கை வருவதற்குத் திட்டமிட்டுள்ள சீன ஆய்வுக் கப்பல் குறித்தும் இந்தியா கவலை வெளியிட்டுள்ளதுடன், கப்பலின் வருகையை தவிர்க்கச் செய்ய இராஜதந்திர முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் ஆய்வு கப்பலின் வருகைக்கு இலங்கையிடம் சீனா அனுமதி கோரியுள்ள நிலையில், இலங்கை இதற்கான அனுமதியை வழங்கவில்லை எனக் கூறப்பட்டாலும், இதற்கான உத்தியோகபூர்வமான அனுமதிகள் அனைத்தும் வழங்கப்பட்டு விட்டன என்றே தெரிகின்றது.

இந்தக் கப்பல் இலங்கையில் 11 தினங்கள் தரித்து நிற்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன.

இவை அனைத்திற்கும் அப்பால் இன்னொரு விடயமும் உண்டு. இக் கப்பல் கடந்த 2019ஆம் ஆண்டும் இலங்கையில் தரித்து நின்றபோது, இதன் பணியாளர்கள் கொழும்பின் சங்கரில்லா ஹோட்டலில் தங்கி நின்ற சமயமே ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அந்தக் குண்டுத் தாக்குதலின்போது இக் கப்பலில் வருகை தந்து, சங்கரில்லா ஹோட்டலில் நின்ற ஆறு பேர் உயிரிழந்திருந்தனர்.

அவ்வாறு உயிரிழந்த ஆறுபேரில் நால்வர் இந்தக் கப்பலின் ஆய்வுத் துறைசார் விஞ்ஞானிகள் என்பதும் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

இக்கப்பல் இம்முறை கொழும்பு வரும்போது அதன் முன்னாள் பணியாளர்கள் அறுவருக்கும் அவர்கள் மரணித்த கொழும்பு சங்கரில்லா ஹோட்டலில் நினைவு நிகழ்வு நடைபெறக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# இலங்கையின் லீ குவான் யுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

## முஷாரப் எம்.பி. அறுகம்பே கூட்டத்தில் புகழாரம்



– கே.எ.ஹமீட் –

இன்னும் 10 அல்லது 15 வருடங்களுக்காவது இந்த நாட்டை ஆளுகின்ற தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்க வேண்டும். அதற்கு நாட்டு மக்கள் முழுமையான அதுரவை வழங்க வேண்டுமென திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகள் குறித்த கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அறுகம்பே ஹொக்கோஸ் ஹோட்டலில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

சிங்கப்பூரின் லீ குவான் யு அந்த நாட்டின் வளர்ச்சிக்காக மக்கள் ஜனரஞ்சகமில்லாத பல தீர்மானங்களை எடுத்தபோது மக்கள் பலரும் அந்தத்வ்தீர்மானங்களை மிகக்கடுமையாக விமர்சித்தனர்.

ஆனால் அன்று லீ குவான் யு எடுத்த தீர்மானங்கள் நாட்டின் நலனுக்காகத்தான் என்பதை பின்னர் எல்லோரும் புரிந்து கொண்டார்கள். இன்று சிங்கப்பூரைச் செதுக்கிய சிற்பியாக அவரை அந்த நாட்டு மக்கள் போற்றுகின்றனர்.

அந்த வகையில்தான் நமது நாடும் மிகவும் கஷ்டமான நிலையில் இருந்தபோது நாட்டின் முன்னேற்றத்திற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனரஞ்சகமில்லாத பல தீர்மானங்களை எடுத்தார். அந்தத் தீர்மானங்களை பலரும்



விமர்சித்தனர். இன்று அந்தத் தீர்மானங்கள்தான் நாட்டை மிக வேகமாக முன்னோக்கி நகர்த்துகின்றன என்பதை எல்லோரும் புரிந்து கொள்கின்ற நிலையைப் பார்க்கின்றோம்.

ஐம்பது வருட நாடாளுமன்ற அரசியலை அனுபவமாகக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டு மக்களும், சர்வதேசமும் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளனர். அந்த நம்பிக்கை இன்று வெற்றியடைந்து வருவதைப் பார்க்கின்றோம்.

இன்று காலை ஜனாதிபதியும் நாங்களும் பினாட்ஸ் பாம் மற்றும் சேர்பிங் பொய்ண் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டோம். அங்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி அவர்களின் செயல்திட்ட வடிவத்தை பார்த்து வியந்து போனோம்.

இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலந்துரையாடலில் உங்கள் பிரச்சினைகள், சவால்கள் தொடர்பிலும் அவருக்கு தெளிவான பார்வை உள்ளது போல் எவ்வாறான தீர்வை வழங்க வேண்டும் என்ற பொறிமுறையையும் கொண்டுள்ளார். அதனால் நிரந்தரத் தீர்வுக்கான முன்னெடுப்புகளையும், ஒருங்கிணைப்பையும் வெற்றிகரமாகச் செய்ய வேண்டும் என்பதையே இங்கு ஆராயவேண்டியுள்ளது. – என்றார்.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்



தொண்டமான், ஜனாதிபதி செயலகப் பிரதானி சாகல ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, வீரசிங்க, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம,பொத்துவில் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம் மற்றும் அதிகாரிகள், சுற்றுலாத்துறை முக்கியஸ்தர்கள், அறுகம்பே ஹோட்டல் உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


இங்கு அறுகம்பே சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகள் மற்றும் திட்டங்கள் குறித்தான கருத்துக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தமையுடன் ஹோட்டல் உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்களையும் உன்னிப்பாகக் கேட்டறிந்து கொண்டார்.

நீண்டகாலமாக எதிர்நோக்கும் ஹோட்டல் காணி உரிமைத்துவம் தொடர்பான பிரச்சினைக்கு விரைவாக தீர்வைப் பெற்றுத்தருவார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தமையுடன் ஹோட்டல்களை விஸ்தரிப்பதற்கும், புதிதாக கட்டுவதற்கும் ஏதுவான ஏற்பாடுகளைச் செய்து தருவார் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.



# கண் தொடர்பான நோய்கள் அதிக வெப்பத்தால் பரவலாம்

## கவனம் செலுத்துமாறு சுகாதார பிரிவு அறிவுறுத்தல்



வட மத்திய, கிழக்கு மாகாணங்களுக்கும் வவுனியா, முல்லைத்தீவு, மொனராகலை மாவட்டங்களுக்கும் அதிக வெப்பம் தொடர்பான எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத் தக்கூடியளவு வெப்பம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனால், அங்கு வாழும் மக்கள் வெப்பம் தொடர்பில் அவதானமாக செயற்படுகின்றமையுடன், அதிகளவு நீரைப் பருகுமாறும், நிழலான இடங்களில் ஓய்வெடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடும் வெப்பம் , வறட்சி நிலவுவதால் கண் தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு சுகாதார பிரிவு மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

வெப்பமான வானிலை காரணமாக கண் தொடர்பான நோய்கள் ஏற்படக்கூடும் என தேசிய கண் வைத்தியசாலையின் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வறட்சியான கால நிலையினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 82 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வறட்சியினால் இதுவரை 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குருநாகல் மாவட்டத்தின் பிரதான ஏரியான பதலகொட குளம் தற்போது வற்றிக் காணப்படுகிறது.

குளத்தை அண்டிய பகுதிகளில் உள்ள நெற்செய்கைகளுக்கு நீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹிங்குராங்கொட பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மின்னேரியா ரொட்டவெவ, கதுருகஸ்வெவ ஆகிய பகுதிகளும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

சுமார் 50 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 38 ஆயிரம் 875 ஏக்கர் அடியாக இருந்தாலும், தற்போது அது மூவாயிரத்து 500 ஏக்கர் அடியாக குறைவடைந்துள்ளதாக நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான நீர்ப்பாசன பொறியியலாளர் கயான் மாதுவாகொட தெரிவித்துள்ளார்.

07 வருடங்களின் பின்னரே இங்குள்ள நீர்த்தேக்கத்தில் நீர் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முருதவெல நீர்த்தேக்கத்திலிருந்து 16,000 குடும்பங்களுக்கு குடி தண்ணீர் விநியோகம் செய்யப்படுவதாகவும் தற்போதைய கொள்ளளவு நீர் சுமார் ஒரு மாத் விநியோகத்திற்கே போதுமானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.








# Pearl Island Inn

## Hotel & Restaurant

**Dine - in | Take Away | Soft Drinks**

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்

உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),

உலகத் தரம் வாய்ந்த

யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்

உணவு வகைகள்

மற்றும்

குளிர்பானங்களை இங்கிருந்தும்

உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று

சுவைத்து மகிந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**

S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**

077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com





கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அழகில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949

# தேசிய வீரன் பண்டார வன்னியனின் 220 ஆவது வருட ஞாபகார்த்த விழா

## நேற்று வவுனியா நகரத்தில் நடந்தேறியது



தேசியவீரன் மாவீரன் பண்டாரவன்னியனின் 220 ஆவது ஞாபகார்த்த விழா நேற்றுக் காலை 09.30 க்கு வவுனியா மாவட்ட செயலகத் திற்கு முன் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சதுக்கத்தில் இடம்பெற்றது.

இதன்போது பண்டாரவன்னியனின் திருவு ருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. அவர் தொடர்பான சிறப்புரைகளும் இடம்பெற்றன.

வவுனியா நகரசபைசெயலாளர் பூ. செந் தில்நாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ. சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், முன்னாள் உள்ளூராட்சிமன்ற தலைவர்களான இ.கௌதமன், சு.ஜெகதீஸ்வ ரன் மற்றும் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்டத்தில் சருகுப்புலி விபத்தில் பலி

அம்பாறை மாவட்டம், மாவடிப்பள்ளி, காரைதீவு பகுதி களை இணைக்கும் பிரதான வீதியில் சருகுப்புலி அல்லது காட்டுப்பூனை இனத்தைச் சேர்ந்த விலங்கின் குட்டி ஒன்று விபத்தில் சிக்கி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.

மக்கள் வசிக்கும் அந்த பகுதியில் நேற்றிரவு சருகுப் புலி உள்நுழைந்து கிராமவாசிகளின் வளர்ப்பு பிராணி களை வேட்டையாடிய நிலையில் இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த சிலர் குறித்த சருகுப்புலி போன்ற பூனை இனங்களை பிடித்து, வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்த சம்பவமும் இடம்பெற்றுள்ளமை சுட்டிக்காட் டத்தக்கது.







# பாடசாலையின் பழைய மாணவியே அதிபராக கல்வியமைச்சால் நியமனம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பாலிஹாவின் புதிய அதிபராக அந்தப் பாடசாலையின் பழைய மாணவி நஸ்மியா கல்வியமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை வலயக் கல்வி அலுவலக உதவி கல்வி பணிப்பாளராகவும், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றி வந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி திருமதி ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ் இலங்கையின் பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் ஒன்றான கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்குப் புதிய அதிபராக கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று (25) தனது கடமைகளை கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் முன்னிலையில் பொறுப்பேற்று கொண்டார்.



கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் தரம் ஒன்று முதல் உயர்தரம்வரை கற்ற பழைய மாணவியான இவர் அப்பாடசாலையின் ஆசிரியராக கடமையாற்றி பின்னர் அதிபர் சேவைக்கும் தெரிவுசெய்யப்பட்ட ஒருவராவார்.

இவரது கடமையேற்பு நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலக உயர் அதிகாரிகள், கல்விமான்கள், ஊர் பிரமுகர்கள், சக பாடசாலை அதிபர்கள், இப்பாடசாலையின் நிர்வாகத்தினர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர், பாடசாலை பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், புதிய அதிபரின் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

# கடுமையான வறட்சி காரணமாக மாட்டு வண்டித் தொழில் பாதிப்பு



(அ.அஸ்வர்)

கடுமையான வறட்சி மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக நாட்டிலுள்ள மாட்டு வண்டித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

விவசாயம், மணல் ஏற்றுதல், ஏற்றி இறக்கல் உள்ளிட்ட கூலித் தொழில்களில் ஈடுபட்டு தமது வாழ்வாதாரத்தை பேணி வந்த நிலையில் தற்பொழுது நிலவும் வறட்சியான காலநிலையும் தமக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி இருப்பதாக மாட்டுவண்டித் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மாடுகளுக்கான தீவனங்கள் உள்ளிட்ட உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளது. வைக்கோல் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. நவீன இயந்திர சாதனங்களின் அதிகரித்த பாவனையும் தமது தொழிலில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்று தெரிவிக்கின்றனர்.

இதனால் போதிய வருமானமின்றித் தவிக்கும் தாம் மாட்டுவண்டித் தொழிலைக் கைவிட்டு மாற்றுத் தொழில்களைத் தேடவேண்டியிருப்பதாகவும், அதுவரை தமது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட குடும்ப வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கால மாற்றங்களின் காரணமாக அருகிவரும் மாட்டுவண்டித் தொழிலை இன்றுவரை தமது பிரதான வாழ்வாதாரமாக மேற்கொண்டுவரும் இவர்களின் நிலையை கருத்தில் கொண்டு அரசு தகுந்த நிவாரண திட்டங்களை உடனடியாக அமுல்படுத்த வேண்டியது இன்றியமையாத தேவையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்ட அரச அதிபர் ஓய்வு நேற்று மணிவிழாவும் மலர் வெளியீடும்






(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக கடந்த 3 வருடங்கள் சேவையாற்றி சேவை ஓய்வு பெறும் திருமதி ஏ. நந்தினி ஸ்ரான்லி டி மெல் அவர்களின் மணி விழா நிகழ்வும் "நந்தினி அம்மா மலர்" வெளியீட்டு விழா நிகழ்வும் மணிவிழா ஏற்பாட்டு குழுவின் ஒழுங்கமைப்பில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று வெள்ளிக் கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

திருமதி ஏ. நந்தினி ஸ்ரான்லி டி மெல் மன்னார் பஜார் பகுதியில் வைத்து மாலை அணிவிக்கப்பட்டு மங்கள வாத்தியத்துடன் மன்னார் மாவட்டச் செயலகம் வரை அழைத்து வரப்பட்டார். அவரின் கணவர், மகள் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலக பிரதான மண்டபத்தில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, சர்வமத தலைவர்கள்,பிரதேச செயலாளர்கள்,திணைக்களத் தலைவர்கள். இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அவருக்கு சேவையைப் பாராட்டிப் பலரும் உரையாற்றினர். "நந்தினி அம்மா மலர்" வெளியீடும் இடம் பெற்றது.

# ஒரே ரகத்தில் 20 ஆமைகள் தென் கடலோரத்தில் சாவு!

## மூன்று நாள்களாகக் கரை ஒதுங்கின

நீர்கொழும்பில் இருந்து களுத்துறை வரையிலான கடற்கரையோரத்தில் மூன்று நாள்களுக்குள் சுமார் 20 ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

கபுங்கொட, பமுனுகம, முத்துராஜவெல சதுப்பு நிலம் மற்றும் இந்துருவ ஆகிய கடற்கரையோரங்களில் இருந்து இந்த இறந்த ஆமைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், வனவிலங்கு திணைக்களம் இறந்த நிலையில் ஆமைகள் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

எனினும், நீருக்கடியில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக ஆமைகள் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில், உயிரிழந்த ஆமைகளின் உடற்கூற்று பரிசோதனைகளை மேற்கொண்டு நீதிமன்றில் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.



இதற்கிடையில் இறந்த அனைத்து ஆமைகளும் ஒரே அளவு மற்றும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்று, தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (NARA) வெளிப்படுத்தியுள்ளது.

மேலும், மேற்படி கடல் பகுதிகளில் உள்ள நீர் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் நாரா அறிவித்துள்ளது.

# வடக்குக் கடலில் சிக்கியது கேரளக் கஞ்சா

வடக்குக் கடலில் சிக்கிய 80 கிலோ கேரளக் கஞ்சா இரண்டு கோடி எழுபது லட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா தொகையொன்று வடக்கு கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. நெடுந்தீவு கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது, கடலில் மிதந்த பொதிகளில் கேரள கஞ்சா இருந்தமையை கண்டுபிடிக்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர். 22 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா தொகை 80 கிலோவுக்கும் அதிகம் என எடை மதிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை இந்த கஞ்சா தொகை கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# பாதாள உலகக் கோஷ்டிகள்: விசேட ‘ஒப்பரேஷன்’ ஆரம்பம்

## முற்றாக அடக்க ஆறு மாதக் காலக்கெடு

பாதாள உலகக் கோஷ்டிகளை முற்றாக ஒழிப்பதற்கு ஆறுமாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்துக்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாடாளாவிய ரீதியில் கொள்ளைகள், துப்பாக்கியைப் பயன்படுத்திய கொலைகள் பல மடங்காக அதிகரித்துள்ள நிலையில் பொலிஸார் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து திட்டமிட்ட குற்றவாளிகள் மற்றும் அவர்களுடன் இணைந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என தெரிவித்துள்ள தேசபந்து தென்னக்கோன், அடுத்த ஆறு மாதங்களில் பாதள உலகக் கும்பல்களை முற்றாக ஒழிக்கும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.



இலங்கை கவலை தரும்விதத்தில் அதிகளவு துப்பாக்கி பிரயோகங்களை எதிர்கொண்டுள்ளதாலும் அதிகளவு உயிரிழப்புகள் இடம்பெறுவதாலும் திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடுவர்களுக்கு எதிராகக் கடும் சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்த வருடம் 40 பேர் இப்படிக் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் மன்னார் அடம்பனில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர் 46- 53 வயதுடைய இருவரும் மோட்டார்சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவேளை இவர்கள் இலக்கு வைக்கப்பட்டனர்.

தென்னிலங்கையில் நேற்று இரு வேறு சம்பவங்களில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

முன்னதாக போதைப்பொருள் மற்றும் பாதளஉலக குற்றங்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தேசபந்துதென்னகோன் தலைமையில் பொலிஸ்மாஅதிபர் குழுவொன்றை நியமித்திருந்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்.

இந்தக் குழுவினர் பாதளஉலக குழுவினர், அவர்களின் சகாக்கள் குறித்த விவரங்களைத் திரட்டியுள்ளனர்.

சில குற்றவாளிகள் சிறைகளுக்குள் இருந்தவாறே தங்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

இந்த நிலையில் விசேட நடவடிக்கை அடுத்தவாரம் ஆரம்பமாகும்.

# அக்கரைப்பற்றில் இல்ல விளையாட்டு விழா









(பௌசுல் றிபாஸ்)

அக்கரைப்பற்று எய்ம்ஸ் சர்வதேச பாடசாலையின் இல்ல விளையாட்டு விழா அண்மையில் அக்கரைபற்று பொது விளையாடு மைதானத்தில் மிகக்கோலாகலமாக நடைபெற்றது.

நிறுவனத்தின் கற்கைகள் பணிப்பாளர் எம்.எ.தஷ்ரீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எ.எம்.நவாஸ் பிரதம அதிதியாகாக கலந்துகொண்டு நிகழ்வுகளை தொடக்கி வைத்தார்.

மிக சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த விளையாட்டு விழாவில் சிவப்பு, பச்சை, மஞ்சள் இல்லங்கள் பங்கு பற்றின. குறுகிய நேரத்தில் சிறுவர்கள் சுயமாகவே பாடசாலைக்கு வெளிக்கிட்டு செல்வது, சிறுவர்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி, இருந்து கொண்டு பலூன் உடைத்தல் போன்ற போட்டிகள் பெற்றோர்களைக் கவரும் நிகழ்வுகளாக அமைந்திருந்தன.

பெரும் எண்ணிக்கையான பெற்றோர்கள் குறிப்பாக தாய்மார்கள் தமது மழலைச் செல்வங்களின் திறைமைகளை காண கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் பிரதம அதிதி ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எ.எம்.நவாஸ், வெற்றி பெற்ற சிறுவர்களுக்கான விருதுகளை வழங்கி வைத்தார்.

நிறுவனத்தின் நிதித்துறை பணிப்பாளர் எம்.எஸ்.சக்கி, அதிபர் ஏ.ஜி. அன்வர், நிர்வாகச் செயலாளர் எம். சாலீம் போன்றோர்கள் இந்த நிகழ்வை சிறந்த முறையில் ஒழுங்கு செய்திருந்தனர்.

# இக்பால் ஞாபகார்த்த இறுதிப் போட்டிக்கு கல்முனை சனிமவுண்ட் வி.க. தகுதி

(அஸ்ஹர் இப்றாஹிம்)




அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் அனுசரணையில் கல்முனை சனி மவுண்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை சேர்ந்த உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான மர்ஹூம் எம்.ஐ.எம்.இக்பால் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண மின்னொளி உதைபந்தாட்ட முதலாவது அரையிறுதிப் போட்டியில் மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு கல்முனை சனிமவுண்ட் விளையாட்டுக்கழகம் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் இச்சுற்றுப் போட்டியில் வியாழக்கிழமை (24) இரவு மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்துக்கு எதிரான போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலை புகுத்திய நிலையில் மத்தியஸ்தர் ரீ.காந்தன் தண்டனை உதை வழங்கப்பட்டது. தண்டனை உதை மூலம் 4:2 கோல் அடிப்படையில் கல்முனை சனி மவுண்ட் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.


குருவே துணை

வாழ்க வையகம் | வாழ்க வளமுடன்



உலக சமுதாய சேவா சங்கம் - கொழும்பு மண்டலம்,
இலங்கை மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை

‘முள்ளில் விழுந்த சேலை’ நிலையில் 13 இப்போது!

கொழும்பு அறிவுத்திருக்கோயில்

SKY

யோகா நிலையம்

திறப்பு விழா

27.08.2023

ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி

அறிவுத் திருக்கதவு திறத்தல்

திறந்து வைப்பவர்:
உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,
அருள்நிதி பத்மஸ்ரீ SKM மயிலானந்தன் அவர்கள்

திறப்புவிழா நிகழ்ச்சிகள்
இடம்: இராமகிருஷ்ண மிஷன் பிரதான மண்டபம்
காலை அமர்வு 10.30 - 1.00 மணி வரை
மாலை அமர்வு 4.30 - 8.00 மணி வரை

சிறப்புரை
திருமதி பாரதி பாஸ்கர்
பட்டிமன்றப் பேச்சாளர், சென்னை, தமிழ்நாடு

இல. 53 1/A, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06, இலங்கை.

# மன்னார் பெரியகடை சங்கத்தின் 30 ஆவது ஆண்டு நிறை விழா









(மன்னார் நிருபர்)

மன்னார் மட்டுப்படுத்தப்பட்ட பெரிய கடை மீனவ கூட்டுறவு சங்கத்தின் 30 ஆவது ஆண்டு விழா வியாழக் கிழமை (24) மன்னார் பெரிய கடையில் அமைந்துள்ள மீனவ கூட்டுறவு சங்க கட்டடத்தில் இடம் பெற்றது.

பெரிய கடை மீனவ கூட்டுறவு சங்கத்தின் தலைவர் கே.கிறிஸ்டின் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ரி.வித்தக கலாநிதி, உதவி கடற்றொழில் பணிப்பாளர் வி.கலிஸ்டன், மாவட்ட கடற்தொழில் உத்தியோகத்தர் எஸ்.பவாநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மட்டுப்படுத்தப்பட்ட பெரிய கடை மீனவ கூட்டுறவு சங்கத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் போது தெரிவு செய்யப்பட்ட மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. விருந்தினர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



# பச்சை குத்துவதால் சமூக நோய் அபாயம் அதிகரித்து வருகிறது

பச்சை குத்துவதன் மூலம் சமூக நோய் பரவல் அபாயம் அதிகரித்து வருகிறது என்று தேசிய இரத்த மாற்று சேவையின் பணிப்பாளர் வைத்தியர் லக்ஸ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பச்சை குத்திய வர்களிடம் இருந்து இனி இரத்தம் எடுக்கப் படமாட்டாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் உள்ள பெரும்பாலான பச்சை குத்தும் மையங்கள் வழங்கப் பட்டுள்ள பரிந்துரைகளை பின்பற்றா ததால் ஆபத்து மேலும் தீவிரமடைவ தாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரத்த தானம் செய்பவரின் இரத்தம் கூறுகளாக பிரிக்கப்படுவதால், இரத்தம் பெறுபவர்களின் உயிருக்கு தேவையற்ற ஆபத்துக்களை ஏற்படுத்த வேண்டாம் எனவும் தேசிய இரத்தமாற்ற சேவை தீர்மானித்துள்ளது என்று வலியுறுத்தி யுள்ளார்.

இதற்கமைய, பச்சை குத்துதல், தோல் குத்துதல் போன்ற செயல்களைச் செய்ப வர்கள், ஒரு வருடத்துக்கு இரத்ததானம் செய்பவர்களாகத் தொடர்பு கொள்ளப் பட மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது.

# நளினியின் கடவுச்சீட்டு விண்ணப்பம்: 4 வாரங்களில் தீர்மானிக்குமாறு உத்தரவு



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று விடுதலையான நளினியின் கடவுச்சீட்டு விண்ணப்பம் தொடர்பில் 4 வாரங்களில் தீர்மானிக்க வேண்டும் என பிராந்திய கடவுச்சீட்டு அதிகாரிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

32 ஆண்டுகள் சிறைவாசத்திற்கு பின்னர் விடுதலையான நிலையில், லண்டனில் வசிக்கும் தனது மகளுடன் வசிக்க விரும்புவதாகவும் அங்கு செல்வதற்காக கடவுச்சீட்டைக் கோரி ஒன்லைன் மூலமாக ஜுன் 12 ஆம் திகதி விண்ணப்பித்ததாகவும் சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவான்மியூரில் தற்போது வசிக்கும் வீட்டிற்கு ஓகஸ்ட் முதலாம் திகதி வருகை தந்த திருவான்மியூர் பொலிஸார் விசாரணை நடத்திய போதிலும் இது வரை தமக்கான கடவுச்சீட்டு வழங்கப் படவில்லை என நளினி தெரிவித்துள்ளார்.

எனவே, பொலிஸார் சரிபார்த்த விபரங்களை கடவுச்சீட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கவும், தனக்கான கடவுச்சீட்டை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உத்தரவிட வேண்டுமெனவும் நளினி தனது மனுவில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து, வழக்கை விசாரித்த நீதிபதி நளினியின் கடவுசீட்டு விண்ணப்பம் தொடர்பில் 4 வாரங்களில் தீர்மானத்தை மேற்கொள்ளுமாறு பிராந்திய கடவுச்சீட்டு அதிகாரிக்கு உத்தரவிட்டு வழக்கை முடிவுறுத்தியுள்ளார்.

## இந்திய மீனவர்கள் மீது தாக்குதல்: இலங்கை கடல் கொள்ளையர்கள் 46 பேருக்கு எதிராக வழக்கு பதிவு




இந்திய கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நான்கு இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட இலங்கை கடல் கொள்ளையர்கள் 46 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வேதாரணயம் கடலோர பாதுகாப்பு குழும பொலிஸார் 11 படகு மற்றும் அடை யாளம் தெரியாத 46 இலங்கை கடல் கொள்ளையர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

அண்மையில் இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஆர்காட்டுத்துறையில் இருந்து தென்கிழக்கில் 22 கடல் மைல் தொலைவில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்களை இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்கியுள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தனர்.

இந்த தாக்குதலில் 5 இலட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை சேதமடைந்துள்ளன எனவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## மீனாவுக்கு கிடைத்த கௌரவம்!



சர்வதேச கிரிக்கெட் பேரவையின் உலகக்கிண்ணத்துடன் நடிகை மீனா நிற்கும் புகைப்படம் இணையத்தில் வெளியாகி ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

தனது இன்ஸ்டாகிராம் பக்கல் குறித்த புகைப்படங்களை பகிர்ந்துள்ள நடிகை மீனா, விரைவில் நடைபெற உள்ள ஆண்களுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை அறிமுகப் படுத்தும் பாக்கியம் எனக்கு கிடைத்ததில் மகிழ்ச்சி எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை எந்தவொரு இந்திய நடிகருக்கும் கிடைக்காத பெருமைக்குரிய அங்கீகாரம் எனக்கு கிடைத்திருப்பதில் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன் என்று பிரான்ஸ் தலைநகர் பரீஸில் உள்ள உலக அதிசயமான ஈபிள் கோபுரத்துக்கு கீழே நின்று உலகக் கிண்ணத்தை நடிகை மீனா அறிமுகப்படுத்தி உள்ளார்.

# ரஷ்யாவின் வாக்னர் கூலிப்படையை பொறுப்பேற்கிறார் புதிய தலைவர்!

ரஷ்யாவின் வாக்னர் கூலிப்படை தலைவர் எவ்ஜெனி பிரிகோஜின் விமான விபத்தில் உயிரிழந்துள்ளார் என உறுதி செய்யப்பட்ட நிலையில் புதிய தலைவர் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

வாக்னர் கூலிப்படை தலைவர் எவ்ஜெனி பிரிகோஜின் உட்பட 10 பேர் கொண்ட குழு விமான விபத்தில் சிக்கி பலியான நிலையில் விபத்து தொடர்பில் பல்வேறு கருத்துகள் கசிந்துள்ளது.

ரஷ்ய இராணுவம் விமானத்தை சுட்டு வீழ்த்தியது எனவும் அந்த விமானத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடி குண்டு வெடித்து சிதறி பயணிகள் அனைவரும் கொல்லப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.



இந்த நிலையில், விமான விபத்தில் எவ்ஜெனி பிரிகோஜின் கொல்லப் படுவதற்கு முதல் நாள் லிபியா சென்ற ரஷ்ய அதிகாரி ஒருவர், இனி வாக்னர் கூலிப்படை ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் செயற்படும் எனவும், அவர்கள் தொடர்ந்து லிபியாவில் சேவையாற்றுவார்கள் எனவும் உறுதியளித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

மேலும், லிபியாவில் களமிறக்கப் பட்டுள்ள வாக்னர் கூலிப்படையினர் புதிய தளபதியிடம் இனி தகவல் பரிமாற்றம் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

# பிரபல டபிள்யூ.டபிள்யூ.இ வீரர் ப்ரே வியாட் மரணம்!



டபிள்யூ.டபிள்யூ.இ. மல்யுத்த போட்டிகளில் அனைவரது கவனத் தையும் ஈர்த்தவர் ப்ரே வியாட் உயிரி ழந்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு போட்டி களில் கலந்து கொள்ளாமல் இருந்த நிலையில் நேற்று அவர் உயிரி ழந்துள்ளார்.

ப்ரே வியாட் டபிள்யூ.டபிள்யூ.இ. மல்யுத்த போட்டிகளில் 2009 ஆம் ஆண்டு அறிமுகமானார். இவர் இதுவரை 2 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

ப்ரே வியாட் உயிரிழந்ததை, பிரபல முன்னாள் டபிள்யூ.டபிள்யூ.இ. வீரர் ட்ரிபிள் ஹெச் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அந்த பதிவில், புகழ்பெற்ற வீரர் ப்ரே வியாட்டின் தந்தை, எங்கள் டபிள்யூ. டபிள்யூ.இ. உறுப்பினர் ப்ரே வியாட் நெஞ்சுவலியால் உயிரிழந்தார் என்ற சோக செய்தியை எங்களுக்கு அவர் தெரிவித்தார். அவரது குடும்பத்திற்காக நாங்கள் பிரார்த்தனை செய்கிறோம் என பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, அவரது மறைவிற்கு டபிள்யூ.டபிள்யூ.இ. அமைப்பு தனது அதிகாரப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் இரங்கலை தெரிவித்துள்ளது.

# கதிரியக்க நீரை வெளியேற்றும் ஜப்பான் அரசு!

பல்வேறு நாடுகளின் எதிர்ப்பை மீறி ஜப்பான் ஃபுகுஷிமா அணு மின் நிலையத்தின் கதிரியக்க நீரை கடலில் வெளியேற்றும் பணியை ஜப்பான் அரசு ஆரம்பித்துள்ளது.

அந்த வகையில் இந்த வெளியேற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக ஃபுகுஷிமா அணு மின் நிலையத்துக்குள் கடல் நீர் புகுந்தது. இதனால் அங்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் அணு உலைகளை குளிர்விக்கும் இயக்கம் நின்று போனது.

அதையடுத்து, அந்த மின் நிலை யத்தின் 3 அணு உலைகள் உருகின. அதிலிருந்த கதிரியக்க எரிபொருள்கள் கடலில் கலந்தன. அதையடுத்து, ஜப்பானிலிருந்து கடல் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய யூனியன் பல்வேறு கட்டுப் பாடுகளை விதித்தது.

அந்த விபத்துக்குப் பிறகு அணு உலைகளிலிருந்து கதிரியக்க நீர் வெளியேறியது. அதனை பெரிய தொட்டிகளில் அதிகாரிகள் தேக்கி வைத்தனர்.

தற்போது சுத்திகரிக்கப்பட்ட அந்த நீரை கடலில் கலக்க ஜப்பான் அரசு முடிவு செய்துள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 26.08.2023




இன்று அதிக பொறுப்புகளை கையாள வேண்டியிருக்கும். இதற்கு நீங்கள் திட்ட மிட்ட கட்டுப்பாடான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு சமநிலை இழக்க நேரலாம். இதனை தவிர்த்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

இன்று பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளில் கவனம் செலுத்துவது சிறந்தது.

உங்கள் துணையுடன் நல்லிணக்கம் காண்பது கடினம். உணர்ச்சி வசப்பட்டு நீங்கள் கூறும் கவன மற்ற வார்த்தைகள் உங்கள் துணையை பாதிக்கும். இது உறவில் பாதிப்பை ஏற்படுத்தும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். போதுமான பணம் சேமிப்பது கடினமாக உணர்வீர்கள்.

மன உளைச்சல் காரணமாக முதுகு வலி ஏற்படலாம்.




இது உங்களுக்கு அனுகூலமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்க லாம். இன்றைய நாளை ஆக்கபூர்வமான விஷயங்களுக்கு நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் அபாரமான செயல்திறன் மூலம் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். உங்கள் தனித்த திறமைகளுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் இனிய வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்ராயம் காணப்படும்.

குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளுக்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் உங்களுக்கு மன திருப்தி ஏற்படும்.

ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும். இன்று ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று லாபகரமான நாளாக இருக்கும். இன்று வெற்றி காண்பதற் கான வழி வகைகளைக் கண்டறி யலாம். உங்களுடைய புத்திசாலித்தனம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் செயல்திறன் மூலம் நற் பெயரைப் பெறுவீர்கள். உங்கள் திறமையை மேலதி காரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் நல்லினக்கம் காணப்படும். இதனால் இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்க சாத்தியமான நாள். நீங்கள் புதிய முதலீட்டின் மூலம் நல்ல லாபம் காணலாம்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அத னால் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.




இன்று எச்சரிக்கையுடனும் விழிப் புணர்வுடனும் இருக்க வேண்டும். அதிக சிந்தனை வயப்படுவீர்கள். அதனை தவிர்க்க வேண்டும்.

பணி நிமித்தமான பயணம் காணப் படும். எதிர்பாராத வேலை மாற்றங்களுக் கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டு உறவின் மதிப்பை உணர முடியும்.

ஏற்றத்தாழ்வு காரணமாக நிதிநிலைமை ஸ்திரமாக இருக்காது. பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் கண்க-ளில் கவனம் தேவை.




இன்று மந்தமான நிலை காணப் படும். தேவையில்லாத மனக் குழப்பங் கள் உங்களை பாதிக்கும். அதனை தவிர்த்து உங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் வேலையில் மூழ்கி இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்களிடம் காணப்படும் மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையிடம் கசப்பையும் விரோதத்தையும் வெளிப்படுத்துவீர்கள். இந்த உணர்வை தவிர்த்தல் வேண்டும்.

பணத்தை கையாளும்போது கவனம் தேவை. அஜாக் கிரதை காரணமாக பணம் இழக்க வாய்ப்புள்ளது.

பார்வைக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளதால் இன்று கண்களை பரிசோதித்துக் கொள்வது நல்லது.




உங்களிடம் சிறந்த உந்துதல் காணப்படும். நேர்மையான மற்றும் சரியான முயற்சி மூலம் நீங்கள் இன் றைய தினத்தை சிறப்பாக ஆக்கலாம். உங்கள் சிந்தனையில் வேகம் காணப்படும்.

நீங்கள் செய்யும் பணி உங்களுக்கு சௌகரியமானதாக இருக்கும். உங்கள் சுய முயற்சி மூலம் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். நீங்கள் அதிர்ஷ்டத்தை விட கடின உழைப்பை நம்புவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சி யாக இருப் பீர்கள். இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு நல்லுறவை வளர்ப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பிற்கான ஊக்கத்தொகை பெறுவீர்கள். உங்கள் பணியில் நேர்மையாக இருப்பீர்கள்.

இன்று ஆற்றல் மிகுந்து காணப்படுவீர்கள். ஆரோக் கியத்தில் எந்த விதமான குறைபாடும் காணப்படாது.




இன்று உங்களிடம் அமைதியின்மை காணப்படும். உங்கள் இலக்குகளில் கவனம் செலுத்தி சிறப்பாக செயல்பட வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பணியில் வளர்ச்சி குறைந்து காணப்படும். இன்று காணப்படும் அதிகப் பணிகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற் கொள்ள இயலாது. அனுசரித்துப் போவதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

பண வரவிற்கான வாய்ப்புகள் குறைவு. நீங்கள் விரும்பும் பணம் இன்று உங்களுக்கு கிடைப்பது கடினம்.

இன்று தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. உங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது மனதில் மகிழ்ச்சி யும் அமைதியும் தேவை. இன்றைய சவால்களை திறமையுடன் எதிர்கொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. இன்று நீங்கள் கவனமாக பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவருக்கும் இடையேயான கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் நெருக்கமான உறவு காணப்படாது.

இன்று பண வரவிற்கான சாத்தியம் குறைவு. இன்று ஏற்படும் கூடுதல் செலவு காரணமாக நீங்கள் ஏமாற்ற-த்தை சந்திப்பீர்கள்.

இன்று பதட்டத்துடன் காணப்படுவீர்கள். தியானம் மற்றும் ஸ்லோகம் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.08.2023




இன்று சுமாரான பலன்களே கிடைக்கும். உங்கள் முன்னேற்றம் குறித்த முயற்சிகளை எடுப்பீர்கள். இதனால் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். தைரியமான கண்ணோட்டத்தை மேற்கொள்ளுங்கள்.

நீங்கள் பணி மாற்றம் செய்ய முயற்சி எடுப்பீர்கள். தற்போதைய நிலைமை உங்களுக்கு திருப்தியை அளிக்காது.

ஆரோக்கியமான உறவை பராமரிக்க அனுசரித்து போகும் அணுகுமுறை தேவை. இருவருக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்பட இது மிகவும் அவசியம்.

இன்று போதிய அளவு பணம் சம்பாதிக்க இயலாது. அதிக பொறுப்புகளை கையாள வேண்டி இருப்பதால் அதிக செலவு ஏற்படும்.

கண் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும்.




இன்று சுமூகமான முன்னேற்றம் காணப்படும். உங்கள் முடிவுகளை இன்று உறுதியாக எடுப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காணும் மன நிலை கொள்வீர்கள்.

பணியைப் பொறுத்தவரை நல்ல நிலைமை காணப்படும். மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அதிர்ஷ்டத்தின் காரணமாக இன்று பண வரவு அதிகமாக காணப்படும்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான நாள். உங்கள் செயல்களில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். முக்கியமான முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவீர்கள். புதிய வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் முயற்சிக்கு பாராட்டு பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வை வெளிப்படுத்துவீர்கள். நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் அமைதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்கள் செயல்களில் யதார்த்தமான அணுகுமுறை தேவை. மகிழ்ச்சியுடன் இருப்பதன் மூலம் இன்று அமைதியற்ற தன்மையை சமாளித்து நம்பிக்கையுடன் இருக்கலாம்.

உங்கள் செயல்களில் வெற்றி பெற நீங்கள் நேர்மறை எண்ணத்துடன் அமைதியாகச் செயல்பட வேண்டும். பணியில் உங்கள் வளர்ச்சி குறித்து சிறிய அளவில் அதிருப்தி காணப்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் உறவில் நல்லிணக்கம் பராமரிக்க இயலும்.

போதிய அளவு பணம் காணப்படாது. பணம் குறைந்து காணப்படும். முடிந்த அளவு பணம் சேமிக்க வேண்டும்.

இன்று மன உளைச்சல் மற்றும் கால் வலி காணப்படும்.





